இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 55 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 19 – ஞாயிற்றுக்கிழமை 05 அக்டோபர் 2025 – கோவை ★★ 8 + 4 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 55: Thiruvalluvar Year - 2056 - Purataasi 19 - Sunday 05 October 2025 - Kovai ★★ 8+4 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.10.2025) இராமநாதபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் 50,752 பயனாளிகளுக்கு 426 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய நிகழ்வில், கூட்டுறவுத் துறை சார்பில் மகளிர் சுயஉதவிக் குழு கடனுதவி திட்டத்தின் கீழ் ஸ்ரீ கிருஷ்ணா சுயஉதவிக் குழுவினருக்கு உணவகம் அமைப்பதற்கு 13 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ.முருகேசன், இராம. கருமாணிக்கம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.10.2025) இராமநாதபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் 50,752 பயனாளிகளுக்கு 426 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய நிகழ்வில், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 26.07 இலட்சம் ரூபாய் மதிப்பிலான வாடகை வேன் வாகனத்தை பயனாளிக்கு வழங்கினார்.

## தமிழ்நாட்டுக்கு வஞ்சகம் செய்வதையே ஒன்றிய பா.ஜ.க. அரசு வழக்கமான பணியாகக் கொண்டிருக்கிறது!

## யாருடைய ரத்தத்தையாவது உறிஞ்சி உயிர் வாழத் துடிக்கும்

# பா.ஜ.க. ஓர் ஒட்டுண்ணி!

## இராமநாதபுரம் அரசு விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு!

**இராமநாதபுரம், அக்.5 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.9.2025) இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணி களைத் திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றுகையில், “தமிழ்நாட்டுக்கு வஞ்சகம் செய்வதையே ஒன்றிய பா.ஜ.க. அரசு வழக்கமான பணியாகக் கொண்டிருக்கிறது!” என்றும், “யாருடைய ரத்தத்தையாவது உறிஞ்சி உயிர் வாழத் துடிக்கும் பா.ஜ.க. ஓர் ஒட்டுண்ணி” என்றும் குற்றம்சாட்டினார்.**

**இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

- நெஞ்சை அள்ளும் அழகிய கடற்கரை மாவட்டமான இராமநாதபுரத்துக்கு வந்திருக்கிறேன்.
- அனைத்து மதங்களையும், சமூகங்களையும் சேர்ந்த மக்கள் நல்லிணக்கத்துடன் வாழுகின்ற மண் இந்த மண்!
- பத்தாம் நூற்றாண்டில், சோழர்கள் பெரும் பேரரசாக நிலை கொள்வதற்கும், பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னர்கள் ஏற்றம் பெறவும், அரசப்படையில் நின்றவர்கள் இந்த இராமநாதபுரம் மண்ணைச் சேர்ந்தவர்கள். இப்படி எத்தனையோ பெருமைகளுக்குச் சொந்தமான இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறும் இந்த அரசு விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### பெயரில் ‘ராஜா’ என்று இருந்தாலும் அவர் எப்போதும் மக்கள் தொண்டர்!

இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் ராஜகண்ணப்பன் அவர்கள். பெயரில் ராஜா என்று இருந்தாலும் அவர் எப்போதுமே மக்கள் தொண்டர்! செயலில் எப்போதுமே கண்ணும் கருத்துமாக இருப்பவர் கண்ணப்பன் அவர்கள்! இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற மிகுந்த ஒத்துழைப்பை வழங்கி உழைத்திருக்கக்கூடிய, இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா என்ற முத்துராமலிங்கம் – கழகத்தின் மூத்த முன்னோடி காதர்பாட்சா என்ற வெள்ளைச்சாமி அவர்களின் அருமை மகன்.



தென்மண்டலத்தில் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்ற செயல்வீரர்களில் முக்கியமானவர் என்னுடைய அன்புத்தம்பி முத்துராமலிங்கம் அவர்கள். அதேபோல், அருகில் இருக்கின்ற மாவட்டமாக இருந்தாலும், தன்னுடைய சொந்த மாவட்டத்துக்கு முக்கியத்துவம் தருவதுபோல, இராமநாதபுரத்தையும் கவனிக்கிறார் நம்முடைய நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள்.

அவரும் இந்த விழாவுக்கு வந்திருக்கிறார். நம்முடைய மக்கள் பிரதிநிதிகளுக்கு துணையாக மட்டுமல்ல, இராமநாதபுரம் மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் துணையாக இருக்கின்ற மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் அவர்களுக்கும், மாவட்டத்தின் அரசு அலுவலர்கள் எல்லோருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

### ‘சேதுபதி நகர்’ எனப் பெயர் சூட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வந்தவுடன் என்னுடைய நினைவுக்கு வந்தது ஆங்கிலேய அரசின் அடக்குமுறைகளை எதிர்கொண்டு, போர் நடத்தி, சிறையிலேயே மாண்டு போன வீரரான சேதுபதி மன்னரைப் பெருமைப்படுத்தும் வகையில், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்துக்கு ‘சேதுபதி நகர்’ என்று பெயர் சூட்டியவர் முதலமைச்சராக இருந்த நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

- 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு உப்புக் கழகத்தை இராமநாதபுரத்தில் தான் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு தொடங்கினார்.
- ஒரு காலத்தில், இராமநாதபுரம் மாவட்டம் என்றால், ‘தண்ணீர் இல்லாத காடு’ என்று சொல்வார்கள். அந்த நிலைமையை மாற்றிக் காட்டிய அரசுதான் கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு!

இந்த அடியேன் அன்றைக்கு உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த காலக்கட்டத்தில்தான், இராமநாதபுரம் மாவட்டத்தில், குடிதண்ணீருக்காக தவித்த மக்களுக்கு 616 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வரப்பட்டது.

இந்தத் திட்டத்தை செயல்படுத்த 3 ஆண்டுகள் தேவைப்படும் என்று அதிகாரிகள் சொன்னார்கள். குடிநீர்ப் பிரச்சினை என்கின்ற காரணத்தால், “எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்கவேண்டும்” என்று நான் சொன்னேன். அதன்படி, இரண்டே ஆண்டுகளுக்குள்ளாக மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்றிய ஆட்சிதான் நம்முடைய தி.மு.க. ஆட்சி! இதற்காக, அந்த டைமில் மாதத்துக்கு 3 முறையாவது இராமநாதபுரத்துக்கு வந்து நான் ஆய்வு நடத்தினேன். அதையெல்லாம் இப்போது நினைவுக்கு வருகிறது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### கரூரில் நடிகர் விஜய் பிரச்சாரத்தில் 41 பேர் பலியான துயரச் சம்பவம்:

## சி.பி.ஐ. விசாரணை கோரிய மனு தள்ளுபடி!

### உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு!

மதுரை, அக்.5-

கரூரில் நடைபெற்ற விஜய் பிரச்சாரத்தில் 41 பேர் பலியான துயரச் சம்பவத்தில், சி.பி.ஐ. விசாரணை கோரிய மனுவை உயர்நீதிமன்ற மதுரை கிளை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் 27ம் தேதி கரூரில் நடைபெற்ற விஜய்யின் பிரச்சார கூட்டத்தில், ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். இந்த துயரச் சம்பவம் குறித்து ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையிலான ஒருநபர் விசாரணை ஆணையம் அமைத்து தமிழ்நாடு அரசு உடனடியாக உத்தரவிட்டது. காவல்துறையினரும் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், கரூர் பெருந்துயர் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட 7 பொதுநல மனுக்கள் உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அமர்வில் நீதிபதிகள் தண்டபாணி, ஜோதிராமன் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. கரூரில் மதியம் 12 மணிக்கு பிரச்சாரம் என கூறிவிட்டு, இரவு 7 மணிக்குதான் விஜய் வந்ததாகவும், விஜய் தாமதமாக வந்ததால்தான் கூட்ட நெரிசல் ஏற்பட்டு உயிரிழப்புகள் நிகழ்ந்ததாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் வலுவாக எடுத்துரைக்கப்பட்டது. வழக்கு தொடுத்த வழக்கறிஞர்களுக்கு த.வெ.க. நிர்வாகிகள் மிரட்டல் விடுப்பதாகவும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், பிரச்சார ஏற்பாட்டை விஜய் கட்சியினர் சரிவர செய்யவில்லை என்று வாதிடப்பட்டது. வழிகாட்டு நெறிமுறை வகுக்கும் வரை எந்த கட்சிக்கும் கூட்டம் நடத்த காவல்துறை அனுமதி அளிக்காது என்றும் தெரிவிக்கப்பட்டது. எந்தவித ஆதாரமும் இல்லாமல் சி.பி.ஐ. விசாரணைக் கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. விஜய் பிரச்சாரக் கூட்டத்திற்கு வந்தவர்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டதா? என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். வழக்கு விசாரணை ஆரம்பக்கட்டத்தில் இருக்கும்போதே சிபிஐ விசாரணைக்கு கோருவது ஏன் என்றும் மனுதாரருக்கு கேள்வி எழுப்பிய நீதிபதிகள், நீதிமன்றத்தை அரசியல் மேடையாக்க வேண்டாம் எனவும் கண்டித்தனர். பாதிக்கப்பட்டவர்களுடன் எந்த வகையிலும் தொடர்பு இல்லாத ஒருவர், சிபிஐ விசாரணை கோர என்ன தகுதி உள்ளது என்றும் சரமாரியாக கேள்வி கேட்டனர். இதையடுத்து, கரூர் சம்பவத்தில் சி.பி.ஐ. விசாரணை கோரிய மனுக்களை நீதிபதிகள் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## கீழடி கண்டேன்! பெருமிதம் கொண்டேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - சமூக வலைதளப் பதிவு!

**சிவகங்கை, அக். 5 -**

**கீழடி அருங்காட்சியகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

கீழடி கண்டேன், பெருமிதம் கொண்டேன்!

- திறந்து வைத்த 30 மாதங்களில் 12 லட்சம் பார்வையாளர்களைக் கவர்ந்துள்ளது கீழடி அருங்காட்சியகம்.
- வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து வருவோரும் தமிழரின் தொன்மை கவினுறக் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது கண்டு வியப்பதை இன்று திடீர் ஆய்வுக்காக அங்குச் சென்ற போது அறிந்துகொண்டேன்.
- கீழடி திறந்தவெளி அருங்காட்சியகமும் வரும் ஜனவரியில் திறக்கப்பட இருக்கிறது.
- பொருநை அருங்காட்சியகம் வரும் டிசம்பரிலேயே மக்கள் பார்வைக்குத் திறக்கப்பட உள்ளது.
- கங்கைகொண்ட சோழபுரத்தில் மற்றுமொரு அருங்காட்சியகம் எழுந்து வருகிறது.
- பூம்புகார் ஆழ்கடல் ஆய்வுகள் தொடங்கிவிட்டன.

நிலத்திலும், நீரிலும், இலக்கியத்திலும் ஆய்ந்து, இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு தமிழ்நிலத்திலிருந்து தொடங்கித்தான் எழுதப்பட வேண்டும் என்பதை உறுதிசெய்து வருகிறது நமது ‘திராவிட மாடல்’ அரசு!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.